சூரிய காந்தி

SOORIYA GANDHI

விலை ரூபா 5-00



வினோவின் தரம்
என்றும் நிரந்தரம்

புதிய சிங்கப்பூர் டிசைன் நகைகள்
22 கரட் நகைகள் பெற
நம்பிக்கையான இடம்

வினோ நகைப் பூங்கா

185, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.



மலர் 1 செவ்வாய்க்கிழமை 3 - 2 - 1998 இதழ் 2


# கிளிநொச்சிபகுதியில்மோதல்கள் மேலும் தொடர்வதாக அறிவிப்பு!

## புலிகள் தரப்பில் 130 பேர் உயிரிழப்பு

கிளிநொச்சியில் நேற்று இரண்டாவது நாளாகவும் மோதல்கள் நடைபெற்றதாகத் தெரிவிக்கப்படுகின்றது. கிளிநொச்சி இராணுவ முகாம்களின் முன்னணிக் காவல் நிலைகளை அழித்து புலிகள் முகாம் பகுதிக்குள் நுழைந்து அங்குள்ள பல படை முகாம்களையும் நிர்மூலமாக்கியுள்ளதாக புலிகளின் குரல் வானொலி தெரிவித்தது. எனினும் புலிகளின் இந்த ஊடுருவல் தாக்குதலை இராணுவத்தினர் முறியடித்து தமது நிலைகளை கிளிநொச்சியில் பலப்படுத்தி வருவதாகப் பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

இதுவரை நடைபெற்ற மோதல்களில் 150 புலிகள் உயிரிழந்ததாகவும் படையினர் தரப்பு இழப்பு விபரங்கள் வெளியிடப்படவில்லை எனவும் புலிகளின் குரல் வானொலி தெரிவித்தது. இராணுவத்தினரின் பெருமளவு ஆயுத தளபாடங்களையும் கைப்பற்றியதாக புலிகளின் குரல் வானொலி தெரிவித்தது.

இது தொடர்பாக கொழும்பில் பாதுகாப்பு அதிகாரிகள் வெளியிட்ட தகவலில் 35 படையினர் கொல்லப்பட்டதாகவும் 200 படையினர் காயமுற்றதாகவும் புலிகளின் 218 சடலங்களை மீட்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் சடலங்கள் மீட்கப்படலாம் என அதிகாரிகள் குறிப்பிட்டனர்.

## மேலும் 24 புலிகளின் விபரம் வெளியானது

கிளிநொச்சியில் நடைபெறும் மோதல்களில் உயிரிழந்த மேலும் 24 புலிகளின் பெயர் விபரங்களைபுலிகளின் குரல் வானொலி நேற்று அறிவித்தது.

யாழ்ப்பாணத்தை சேர்ந்த கந்தையா ஜயேந்திரன், சூரியசேகரம், ரவிசேகரம், கந்தையா சிவநீதி, சிவநேசன் தர்சினி, நாகராசா செந்தில் மோகன், துரைராசா நரேந்திரன், செல்லையா செல்வகுமார், அந்தோனிப்பிள்ளை ஜெயின்ஷா மட்டக்களப்பைச் சேர்ந்த வைரமுத்து ஜெயகாந்தன், கிருஷ்ணபிள்ளை ஜெயசீலன், தம்பி அப்பா குமரன், வேலாயுதம் தேவராசா, மகேஸ்வரன் உதயராசா, அழகையா விநாயகமூர்த்தி, அழகையா இளையதம்பி, செல்வராசா கிருஷ்ணராசா, சின்னத்தம்பி மோகனதாசன், வவுனியாவைச் சேர்ந்த தனபாலன் தயாசீலன், முறிகண்டியைச் சேர்ந்த குமாரவேல் ஜெயகுமார், கிளிநொச்சியைச் சேர்ந்த இராசையா விஜிதா, அம்பான் குளத்தைச்சேர்ந்த பாலசுந்தரம் நந்தகுமார், மஸ்கெலியாலைச்சேர்ந்தஆறுமுகம் இராசேந்திரம் மணலாறைச் சேர்ந்த கணபதி நாகராணி திருமலையைச் சேர்ந்த விசுவலிங்கம் தேவராசா ஆகியோரின் விபங்கள் நேற்று அறிவிக்கப்பட்டது.

## விமானத்தாக்குதல் ஆரம்பம் என அறிவிப்பு

(கொழும்பு)

பரந்தன் பகுதியில் கடந்த சில தினங்களாக தாக்குதல் நடத்திய விடுதலைப்புலிகள் மீது விமானப்படை தாக்குதலை ஆரம்பித்துள்ளதாக கொழும்பில் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்தது.

கிபிர் ஜெட்விமானங்களும் எம். ஐ. 24 [illegible] உலங்கு வானூர்தி[illegible] இத் தாக்குதலில் [illegible] பற்றுவதாக தெரிவிக்கப்படுகின்றது. விமானத் தாக்குதலில் புலிகளின் உழவு இயந்திர[illegible] மற்றும் எட்டுமுகாம்கள் அளிக்கப்பட்டதாகவும் அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### கிளிநொச்சியில்

## கிபிர் குண்டுவீச்சு மத்தியகல்லூரி சேதம்

கிளிநொச்சியில் கிபிர் ஜெட் விமானங்கள் நடத்திய தாக்குதலில் கிளிநொச்சி மத்திய கல்லூரி முற்றாக சேதமுற்றதாக புலிகளின் குரல் வானொலி தெரிவித்தது. விமானத் தாக்குதல் தொடர்ந்து நடைபெற்று வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதேசமயம் ஷெல் தாக்குதலும் மாங்குளம் பகுதி நோக்கி நடத்தப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

கள் தெரிவித்தன.

## தமிழர் இனப்பிரச்சனை கனடாவில் மாநாடு

கனடாவில் தமிழர் பிரச்சனை பற்றிய சர்வதேச கருத்தரங்கு மகாநாடு கனடா மொன்றியோல்நகர் கொங்காடியா பல்கலைகழகத்தில். இலங்கையில் அமைதிக்கான வாய்ப்புகள் என்னும் தலைப்பில் சர்வதேச கருத்தரங்கு மகாநாடு ஒன்று நேற்று முன்தினம் நடைபெற்றது.

இம்மகாநாட்டினை யாழ். பல்கலைக்கழக பேராசிரியரும் தற்போது கொங்காடிய பல்கலைக்கழக பேராசிரியருமான ஜோன் சந்திரகாந்தன் அவர்கள் தொடக்கிவைத்து உரையாற்றினார்.


(4 ஆம் பக்கம் பார்க்க)


## சடலங்களை ஒப்படைக்க இரு தரப்பும் நடவடிக்கை

கிளிநொச்சி மற்றும் பரந்தன் மீது விடுதலைப்புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் கொல்லப்பட்ட இராணுவத்தினரின் எண்ணிக்கை 35 என இந்திய வானொலி இலங்கை அரசை மேற்கோள்காட்டி அறிவித்தது. காயமடைந்த 250 இராணுவத்தினரில் 41 பேரின் நிலை கவலைக்கிடமாக உள்ள தெனவும் காயமுற்றமேலும் 13படையினர் மரணமடைந்ததாகவும் தங்களால் கைப்பற்றப்பட்ட 218புலிகளின் சடலங்களை புலிகளிடம் ஒப்படைப்பதற்காக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடம் தொடர்பு கொண்டுள்ளதாகவும் கொழும்பிலுள்ள இராணுவ அதிகாரிகளை மேற்கோள்காட்டி இந்திய வானொலி தெ


(4 ஆம் பக்கம் பார்க்க)


### நகரின் பாதுகாப்பு தீவிரம்

## வீதித் தடைகள், சோதனை கொழும்பில் அதிகரிப்பு

(கொழும்பு)

இலங்கையின் சுதந்திர பொன் விழா நிகழ்வு நடைபெறுவதற்கு முன்னோடியாக தற்போது கொழும்பு நகர் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. திடீர் திடீரென வீதித் தடைகள் மேற்கொள்ளப்பட்டு சோதனைகள் மேற்கொள்ளப்படுவதாக ஏ. எவ். பி. செய்தி நிறுவனம் தெரிவிக்கின்றது.

இதேவேளை சுதந்திர தின நிகழ்வு நடைபெற இருக்கும் சிறி ஜெயவர்த்தனபுர பகுதியும், அதனைத் தொடர்ந்து கண்காட்சி நடைபெறும் இடமான பண்டாரநாயக்கா சர்வதேச மகாநாட்டு மண்டபப் பகுதியும் மற்றும் கொழும்பு உலகச் சந்தை வர்த்தகப் பகுதி என்பன அதி தீவிர பாதுகாப்பு வலயங்


(4 ஆம் பக்கம் பார்க்க)

# சுதந்திரதின வைபவம் கண்டியில் ரத்தானது

# அமைச்சர் ரத்வத்தை ராஜினாமா மிரட்டல்

## ராஜினாமா கடிதம் தொடர்பாக புதிய தகவல்

(கொழும்பு)

கண்டியில் சுதந்திரதின பொன்விழா கொண்டாட்டங்கள் நடாத்துவதற்குஆரம்பத்தில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க எதிர்ப்புத் தெரிவித்த போதிலும் அங்கு நடாத்தப்படவேண்டும் என்பதில் பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் ரத்வத்தையே விடாப்பிடியாக நின்றுள்ளார் எனக் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

அமைச்சர்ரத்வத்தையுடன் வேறு சில அமைச்சர்களும் கண்டியில் வைபவங்கள் நடைபெறுவதையே விரும்பினர். எனினும் கண்டி தலதா மாளிகையில் இடம்பெற்ற குண்டு வெடிப்பைத் தொடர்ந்து ஜனாதிபதியுடன் தொலைபேசியில் தொடர்புகொண்ட அஸ்கிரிய மானாயக்கதேரர் சுதந்திரதின வைபவங்கள் கண்டியில் நடத்தப்படக் கூடாது என்றும் தலதா மாளிகையின் புனரமைப்பில் அவசரம் காட்டப்படக் கூடாது என்றும் கேட்டுக் கொண்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இதற்கு ஜனாதிபதி நிலமையை ஆராய கண்டிவிரைந்துள்ளனர்எனதேரருக்குகூறிய போது குறுக்கிட்ட அவர், அமைச்சர்கள் அல்ல அரசனே தலதாமாளிகை குறித்து முடிவு செய்யவேண்டும் என்றார்.

இதைத் தொடர்ந்து மறுநாள் காலையில் கண்டிக்கு உடனடியாகவிரைந்த ஜனாதிபதி சந்திரிகா தலதாமாளிகை சேதங்களை நேரில் பார்வையிட்ட பின்பு, சுதந்திரதின கொண்டாட்டங்கள் கண்டியில் நடத்துவதை நான் கடுமையாக ஆட்சேபித்தேன்எனினும் அது கண்டியில் நடத்தப்பட முடிவு செய்யப்பட்டது என அங்கு வைத்து குறிப்பிட்டதாக கொழும்பு தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதைத் தொடர்ந்து கொழும்பு திரும்பிய ஜனாதிபதி தன் நெருங்கிய சகாக்களுடன் நடத்திய மந்திராலோசனையின் பின்னர் சுதந்திரதின வைபவங்களை கொழும்பிற்கு மாற்றுவதுஎன முடிவு செய்தார் ஜனாதிபதியின் இம்முடிவையிட்டுமிகவும் கவலையடைந்த அமைச்சர் ரத்வத்தை இது தொடர்பாக ஜனாதிபதியுடன் பேச அலரி மாளிகைக்கு விரைந்தார். ஆனால் அங்கு சென்ற அமைச்சர் ரத்வத்தைக்கு பெரும் அதிர்ச்சி காத்திருந்தது. தனதுநெறிப்படுத்தலை சரியாக அமைச்சர் பின்பற்றாமைக்காக கடுமையாக ஜனாதிபதி அவரைச்சாடிய தாக கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதைத் தொடர்ந்து தன் வீடு திரும்பிய அமைச்சர் ரத்வத்தைதன் நெருங்கிய சகாக்களின் உதவியுடன் தனது பதவிவிலகல் இராஜினாமாக் கடிதத்தை எழுதினார். தன் கடிதத்தில் அவர் பாதுகாப்பு நிலைமைகள் தொடர்பாக தாம் எடுத்த சரியான நடவடிக்கைகளை விளக்கியிருந்தார். கடிதத்தின் பிரதிகள் ஜனாதிபதி, தொடர்பு சாதனங்கள், ஐ. தே. க. அலுவலகம் என்பவற்றுக்கு அனுப்பப்பட்டன. எனினும்அமைச்சரின் ராஜினாமா கடிதம் ஜனாதிபதியால் எற்றுக் கொள்ளப்படவில்லை.


## தேவை

* அச்சுக்கோப்பவர்கள் (ஆண் - பெண்)
* யந்திர இயக்குனர்கள்

நேரில் வரவும்:

**சூரிய காந்தி**
68/1, ராசாவின் தோட்டம் வீதி,
யாழ்ப்பாணம்.



## விளம்பரதாரர் கவனத்துக்கு

'சூரியகாந்தி'யில் விளம்பரம் செய்ய விரும்புகின்றவர்கள் 68/1 ராசாவின் தோட்டம் வீதி, யாழ்ப்பாணம் என்ற எமது தலைமை நிலைய முகவரியிலோ

அல்லது

81, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்ற எமது கிளை அலுவலகத்திலோ எம்முடன் தொடர்பு கொள்ளலாம் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத் தருகிறோம்.

நிர்வாகி
'சூரியகாந்தி'



யாழ். அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலை

### 5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில்

கணேசமூர்த்தி மகோதரன்
புள்ளி - 115 பெற்று சித்தியடைந்துள்ளார்
அவரையும் அதிபர் ஆசிரியர்களையும்
பாராட்டுகின்றோம்
(இவர் கஜமுகன் பாலர்பாடசாலை பழைய மாணவரும் ஆவார்)

நலன்விரும்பிகள்



### மாதாந்தப் பயிற்சிப் பரீட்சை - 01

ஆண்டு 1 முதல் 11 வரைக்கான

சகல பாடங்களுக்கான பரீட்சை.
பரீட்சை நடைபெறும் திகதிகள் :
07 - 02 - 98 சனி
08 - 02 - 98 ஞாயிறு

நேரம்:- காலை 8 மணி முதல் 5-30 மணி வரை.
வெளி மாணவர்களும் பரீட்சைக்கு அனுமதிக்கப்படுவர்.

வினாத் தாள்கள் பெற விரும்புவோர்
தொடர்பு கொள்ளவும் :-

**நாவலர் கல்வி நிலையம்,**
நாவலர் வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.


## குறிகாட்டுவான் பஸ்ஸில் கருவாடு நாற்றம்

குறிகாட்டுவான் - யாழ்ப்பாணம் பஸ்ஸில் கருவாடு ஏற்றப்படுவதால் பயணிகள் பல அசௌகரியங்களை எதிர் நோக்குகின்றனர் என புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் கருவாடு ஏற்றுவதை பஸ்களில் தடைசெய்யுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தினமும் பயணம் செய்யும் அரச ஊழியர்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

# புலிகள் மீதான தடையை அரசு பரிசீலிக்க வேண்டும்

### சரோஜினி யோகேஸ்வரன் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

விடுதலைப் புலிகளைத் தவிர்த்து எந்த ஒரு பேச்சுவார்த்தையும் முன்னேற்றகரமானதாக அமையாது. ஏனெனில் இன்றைய யுத்தத்தில் முக்கிய பங்கு விடுதலைப் புலிகளே வகிக்கின்றனர், ஆகவே அரசாங்கம் தற்போது விடுதலைப் புலிகள் மீது விதித்துள்ள தடையை மறுபரிசீலனை செய்யவேண்டும் என யாழ். மாநகரசபை மேயராக பதவி ஏற்கவுள்ள சரோஜினி யோகேஸ்வரன் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் காலை அவரின் இல்லத்தில் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின்போது இக்கருத்தைத் தெரிவித்தார். அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் யுத்த நிறுத்தம் ஒன்றை மேற்கொள்ள வேண்டும். அதன் பின்னர் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்துடன் பேச்சுக்கள் நடைபெற வேண்டும் என்பதே தனதும், தனது கட்சியான தமிழர்விடுதலைக் கூட்டணியின் நிலைப்பாடு மாகும் என தெரிவித்தார்.

## யாழ். நீதவானாக பாலச்சந்திரன் பதவி ஏற்பு

யாழ்ப்பாணம் மாவட்ட மற்றும் மஜிஸ்திரேட் நீதவானாக பி. பாலச்சந்திரன் நேற்று பதவியேற்றார். இது வரை பருத்தித்துறை நீதவானாக இவர் பணியாற்றி வந்தார்.

மல்லாகம் மாவட்ட நீதவான் மு. திருநாவுக்கரசு முன்னிலையில் இவர் பதவிப் பிரமாணம் செய்து கொண்டார்.

இதுவரை யாழ். மாவட்ட, மஜிஸ்திரேட் நீதவானாக பதவிவகித்த ஏ.என் இராமச்சந்திரன் மேல் நீதிமன்ற நீதவானாக பதவி உயர்வு பெற்று கொழும்பு சென்றுள்ளதால் இந்த நியமனம் இடம்பெறுகிறது.

## அகதிகள் சென்றனர்

53 ஈழத்தமிழர்கள் நேற்று படகுகளில் இராமேஸ்வரம் வந்துசேர்ந்ததாக இந்திய வானொலி தெரிவித்தது. 20 பெண்கள் ஆறு குழந்தைகள் இவர்களில் அடங்குகின்றனர்.

## புலிகள் தாக்குதல்

(கொழும்)

மட்டக்களப்பில் ஏறாவூர் பகுதியில் இராணுவ முன்னரங்கு பகுதிகளில் புலிகள் நேற்று முன்தினம் தாக்குதல் நடத்தினர். இராணுவத்தினரும் பொலிசாரும் பதில் தாக்குதல் நடத்தியதாகவும் புலிகள் தப்பிசென்றுவிட்டதாகவும் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்தது.

சின்ன



துரை

### ஆட்டத்தைப் பார்க்கலாம்

சந்திரிகா சமரவீரா
சோனியா வாஜ்பாயி
சோல்ஜர்கள் மேஜர்கள்
கழுத்தை நெளித்து
இடுப்பை ஒடித்து
போடும் ஆட்டத்தைப்
பார்க்கலாம் யாழ்ப்
பாணத்து ரிவியில்
காரணம் மினி மின்சாரம்

# சூரியகாந்தி

## வளமான எதிர்காலம் நிச்சயம் வரும்

நிச்சயமற்ற எதிர்காலந்தான் இன்று நம்மையெல்லாம் வாட்டிக் கொண்டு நிற்கிறது. நினைவு சுகத்தில் இளைப் பாறிக் கொண்டிருக்கும் வயது வந்தவர்களுக்கும், பென்ஷன் காரர்களுக்கும் இது அப்படி ஒன்றும் பாரதூரமான பிரச் சினை அல்ல!

ஆனால் இளவயதுக் காரர்களைப் பொறுத்த அளவில் இது மிகப் பெரிய பிரச்சினை! பலபேருக்கு இது தெரிவ தில்லை!

எதிர்காலம் பற்றி உறுதியான நல்ல நம்பிக்கை உடைய ஒரு இளைஞன்தான் வாழ்க்கையில் முன்னேற முடியும்,

''ஒளி படைத்த கண்ணினாய் வா! வா! என்று பாரதி பாடியபோது தெளிவானதும் உறுதியானதுமான எதிர்கால கருத்துக்களைத் தன் உள்ளத்தில் நிறுத்திக் கொண்ட சாதனை படைக்கத் துடித்து நிற்கும் இளைஞர்களைத்தான் தனது மனக்கண்ணில் கண்டான்.

''என்னால் இது முடியும்''. ''நான் இதனை எப்படியும் சாதித்தே திருவேன்''; ''எந்தத் தடைக் கல்லையும் என் னால் படிக் கல்லாக பயன்படுத்த முடியும்'' என்ற துணிச் சலும் அஞ்சாமையும் வீரமும் நிறைந்த இளைஞர்களால் தான் தங்கள் எதிர்கால வாழ்வை வளமாக்க முடியும்.

சோம்பலும். தேக்க நிலைமையும், நம்பிக்கை வரட்சியும் வருங்கால வளத்துக்கு உதவாது!

இன்றைக்குச் செய்யக் கூடியதை ''நாளைக்குச் செய்ய லாமே'' என்று ஒத்திப்போடுவது ஒருபோதுமே கூடாது.

நாம் இன்று வாழுகின்ற சூழலும், முக்கியமாக நமது பத்திரிகைகளும் தொடர்பு சாதனங்களும் நமக்குக் கொண்டு வருகின்ற செய்திகளும் நமது இளைஞர்களுக்கு ஒரு நம் பிக்கை வரட்சியைத் தருகின்ற சங்கதிகளாகவே இருக் கின்றன!

சில இளைஞர்கள் தினம் தினம் நடத்தும் கோயில் வழி பாட்டைக்கூட எடுத்துக் கொள்ளுங்கள்.

என்ன தெரிகிறது? பெரும்பாலான இளைஞர்களின் மனத்தில் நிறைந்திருக்கும் பயமும் ஆசையும்தான் அவர்களது வழிபாட்டுக்குக் கூட காரணமாக இருக்கின்றன.

''நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்'' என்று பாடுதற்குத் தூண்ட வேண்டிய கோயில் வழிபாடு எள்ளுப் பொட்டலம் எரிப்பதன் மூலம் சனியனை விரட்டி விடலாம் என்ற பய உணர்ச்சியின் அடிப்படையில் அமைதல் கூடாது.

நமது இளைஞர்கள் மத்தியிலே ஒரு புதிய விழிப்பு தோன்ற வேண்டும்.

நெஞ்சிலே பயத்தையும், தயக்கத்தையும், நினைத்துக் கொள்ளும் பழக்கத்தையும் பென்ஷன்காரர்களைப் போல நினைவு சுகத்தில் இன்பம் காண முனையும் வழக்கத்தையும் நிச்சயமாக அவர்கள் கைவிடவேண்டும்.

## 9 கிராமத்தவர்கள் கொலை தம்பலகாமத்தில் பேரணி

(கொழும்பு)

திருகோணமலை மாவட் டத்தில் தம்பலகாமம் கிரா மத்தின் மக்கள்நேற்று பெரிய ஆர்ப்பாட்டப் பேரணி யொன்றை நடாத்தினர் பொலிஸாரினால் இக்கிராமத் தைச் சேர்ந்த ஒன்பது பெயரை கடந்த சனியன்று கொலை செய்ததை தொடர் ந்து இதனைக் கண்டிக்கும் நோக்குடன் இன்றுஆர்ப்பா ட்டபேரணி நடைபெற்றது.

பொலிஸார் எமது கிராமத் தவர்களை படுகொலை செய் கின்றார்கள். அத்துடன்எமது கால்நடைகளான ஆடு,மாடு கோழிகளைக் கூட பிடித்து தமது உணவாக உட்கொள் கின்றனர். எனவே எமது கிராமத்திற்கு பொலிஸார் வேண்டாம் என்ற கோஷம் எழுப்பியவாறு சுமார் ஆயி ரத்து ஐந்நூறுக்கு மேற்பட்ட தமிழ் மக்கள் ஆர்ப்பாட்ட ஊர்வலமாக தம்பலகாமம் பிரதேச செயலர் அலுவலகம் வரை சென்றனர்.

இன்றுக்குள் கிராமத்தில் இருந்து பொலிஸார் வாபஸ் பெறப்படாது விட்டால் கிரா மத்தைவிட்டு கிராமவாசிகள் வெளியேறிவிடுவார்கள் என தெரிவிக்கப்பட்டது.

## அனுருத்தவுக்கு ஆதரவாக கொழும்பில் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அநுரத்த ரத்வத்தை தனது இராஜினாமா யோசனையை கைவிடவேண்டும் எனக்கோரி நேற்றுமாலை கொழும்பு ஹைட்பார்க்கில் ஆர்ப்பாட்ட ஊர்வலம்ஒன்று நடத்தப்பட்டது.

ரத்வத்தை தனது ராஜினாமாவை கைவிடச்செய்ய அரசு நிர்ப்பந்திக்க வேண்டும் எனக் கோரிஎல்தேற்சன் மண்டபத்திற்கு அருகில் நால்வர் உண்ணாவிரதம் ஆரம்பித்துள்ளனர்.

## தென்னை செய்கை ஊக்குவிப்பு

யாழ். மாவட்டத்தில் தென்னைப் பயிர்ச் செய்கையை ஊக்குவிக்கக் நடவடிக்கை எடுத்துள்ளது.

1997 ஆம் ஆண்டு வீட்டுத் தோட்ட மானியத்திட்டத் தின் கீழ் 5000 உயரின தென் னங்கன்றுகள் ஒன்பது உதவி அரசாங்க அதிபர்கள் பிரிவு களுக்கு பகிர்ந்து வழங்கப்பட் டன.

இவ்வாண்டுக்கு 4 ஆயி ரத்து 250 உயரின தென்னங் கன்று நாற்று மேடை அமைக் கப்பட்டுள்ளது. 1990 ஆம் ஆண்டு முதல் 1997 வரையி லான போர்க்கால அனர்த் தங்களினால் 258 ஹெக்டர் தென்னை மரங்கள் அழிந்துள் ளன.

## அரசியல் வாதிகளை சாடும் பாடசாலை மாணவர்கள்

இலங்கை சுதந்திரமடைந்த பின் நேர்மையான அரசியல் வாதிகள் ஒருவருமே பதவி ஏற்கவில்லை. இவ்வாறு ஷமிலாகுமாரி என்ற ஆண்டு ஒன்பதில் கல்வி பயிலும் மாணவி தெரிவித்துள்ளார். இலங்கையின் சுதந்திர தினப் பொன்விழா பற்றி மாணவி களிடையே சண்டே ரைம்ஸ் பத்திரிகை நடத்திய கருத்துக் கணிப்பிலேயே இம்மாணவி மேற்கண்டவாறு தெரிவித் துள்ளார்.

பாலமுருகன் என்ற மற் றொரு பதினைந்து வயது மாணவன் இனப்பிரச்சினை யைத் தீர்ப்பதில் எந்தவொரு அரசியல் வாதியும் உண்மை யான அக்கறை காட்ட வில்லை யெனத் தெரிவித் துள்ளார்.

## ஐ. தே. க. யோசனை தமிழ்க் கட்சிகளுக்கு

ஐக்கிய தேசியக்கட்சி தயாரித்துள்ள புதிய மாற்று யோசனைகளை சிறுபான் மைக்கட்சிகளின் பரிசீலனை க்கு அனுப்பி வைத்துள்ளது. இத்தீர்வுத்திட்டம் குறித்து முஸ்லீம் காங்கிரஸ் மேலதிக விபரங்களை ஐ. தே. கவிடம் கோரியுள்ளது.

ஐ. தே. க தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஏனைய கட்சித் தலைவர்களையும் விரைவில் சந்தித்து தமது மாற்றுயோச னைகள் பற்றி கலந்துரை யாடவுள்ளதாக ஐ. தே. க. வட்டாரங்கள் தெரிவித்தன.

## வவுனியா நிலையத்தில் சிங்களத்தில் அறிவிப்பு

கொழும்பு கோட்டை புகை யிரத நிலையத்தில் வவுனியா புகையிரதம் புறப்படுவது பற் றிய அறிவித்தல்கள் சிங்களத் திலேயே ஒலிபரப்பப்படுகின் றன.

இதனால் தமிழ்ப்பிரயாணி கள் பெரிதும் சிரமப்படுகின்ற னர். கொழும்பு கோட்டை புகையிரத நிலையம் இலங் கையின் 50-வது சுதந்திர தின பொன் விழாவை முன் னிட்டு புது மெருகு பெற்று வரும் இவ்வேளையில் இந்த விடயத்திலும் கவனம் எடுக்கு மாறு தமிழ்ப் பிரயாணிகள் சிலர் கோரிக்கை விடுத்துள் ளனர்.

## விளம்பரங்களின் அபரித நுழைவு

அரசின் கட்டுப்பாட்டில் உள்ள வானொலி, தொலைக் காட்சி நிகழ்ச்சிகளில் விளம் பரங்களின் தொல்லை அதி கரித்துள்ளதாக முறைப்பாடு தெரிவிக்கப்படுகிறது. செய்தி கள், நிகழ்ச்சிகள் என்பவற் றிற்கு இடையே பார்ப்பதற் கும் கேட்பதற்கும் சலிப்பை தரும் வகையில் விளம்பரங் கள் புகுத்தப்படுகின்றன.

தொடர்பு சாதனங்களில் இத்தகைய அபரிதமான விளம்பர நுழைவு தொடர்பு சாதனங்களின் இலக்கை பாழ்படுத்துவதாக சுட்டிக் காட்டப்படுகிறது.

பெரிய



துரை

## சவாரி அரசாங்க செலவில். . .

ஊழல். வீணடித்தல், தவறாகப் பயன் படுத் துதல், அதிகார துஷ்பிரயோகம் இப்படி எத்தனையோ குற்றச்சாட்டுகளுக்கு இலக்கானவர்களாக சில 'பெரிய' மனிதர்கள் இருக்கிறார்கள். அதிகாரம் கையில் இருக் கும்போது யாரும் இவர்களைத் தட்டிக் கேட்க முடி யாது.

ஒரு 'பெரிய மனித'ரின் அந்தஸ்தின் எதிர்காலம் ஊசலாடிக் கொண்டிருக்கிறது. ஆனால் அவரோ எதுபற்றியும் கவலைப்படுபவராகத் தெரியவில்லை!

தனது அழகான மனைவியின் வேலைக்காரப் பெண்ணை மலைநகரம் ஒன்றிலிருந்து கொழும்புக்கு வரவழைப்பதற்கு எந்தவித தயக்கமுமின்றி இவர் ஒரு ஹெலிக்கொப்டரை பயன்படுத்தியிருக்கிறார்.

சவாரி அரசாங்கச் செலவில் நடந்திருக்கிறது.

## பளையில் மலேரியா நோயாளிகள் தொகை அதிகரிக்கும் அபாயம்

பச்சிலைப் பள்ளி பகுதியில் மலேரியா நோயின் தாக்கம் அதிகரித்து இருப்பதாக பளை மருத்துவ மனை புள்ளிவிபர ங்கள் தெரிவிக்கின்றன.

நாளாந்தம் சுமார் நூற்று க்கும் அதிகமான வர் கள் பளை மருத்துவமனைக்கு மலேரியா நோயினால் பாதி க்கப்பட்ட நோயாளர் சிகிச் சை பெற்று வருவதாகவும் தெரிவிக்கப் பட்ட போதும் இதில் இருபது சதவீதத்தி னர் மூளை மலேரியாவினால் பாதிக்கப் பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப் படுகின்றது.

பலமாத காலமாக மலேரி யா நுளம்பு பரவுவதை தடுப்ப தற்கான கிருமிநாசினிகள் இப் பகுதியில் தெளிக்கப்பட்டமை யும் பாதுகாப்பு அரண்கள் பல கைவிடப்பட்ட நிலையில் இருப்பதால் அங்கு நீர்தேங்கி இருப்பதால் நுளம்பு மிகவும் வேகமாக பரவுவதாகவும் வைத்திய வட்டாரங்கள் மே லும் தெரிவிக்கின்றன.

# இராஜினாமாவை ரத்வத்த வாபஸ் பெற்றுக்கொண்டார்

பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் பதவியை ராஜினாமாச் செய்ய முன்வந்த ஜெனரல் அனுருத்த ரத்வத்த ராஜினாமாச் செய்வதில் இருந்து வாபஸ் பெற்றுள்ளார். ஜெனரல் ரத்வத்த ஜனாதிபதிக்கு எழுதியுள்ள கடிதத்தில் முற்றிலும் கொள்கை அடிப்படையில் தனது மனச்சாட்சியின் படி தான் முன்னர் ராஜினாமாச் செய்து கொண்டதாக தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி வேண்டுகோள் விடுத்ததை அடுத்து தனது தீர்மானத்தைமாற்றிக்கொள்வது தொடர்பாக பதிலளிப்பதற்கு ஏற்பட்ட காலதாமதம், குறித்தும்வருத்தம் தெரிவித்துள்ளஜெனரல்ரத்வத்தை தனது முடிவை பரிசீலனை செய்யவும் சிந்திப்பதற்கும் காலஅவகாசம்தேவைப்பட்டதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

தான்தீர்மானமானமுடிவை எடுப்பதற்கு தற்போதைய சூழ்நிலை சற்றுச் சிரமமானதாக இருந்ததாகவும் ரத்வத்த தெரிவித்தார்.

# பொலிஸ் மா அதிபரும் இராஜினாமா திட்டம்

தலதா மாளிகை குண்டு வெடிப்பிற்கு பொறுப்பேற்ற பிரதிபாதுகாப்பு அமைச்சர் அநுரத்த ரத்வத்தை ராஜினாமா செய்திருப்பின் அவரைத் தொடர்ந்து பொலிஸ் மா அதிபர் டபிள்யூ. பி. ராஜகுருவும் இராஜினாமா செய்யவிருந்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

இதே சமயம் கொழும்புக்கு மாற்றப்பட்டுள்ள சுதந்திர தின கொண்டாட்டங்களின் பாதுகாப்பு தொடர்பாக அமைச்சர் ரட்ணசிறிவிக்கிரமநாயக்கா கடந்த வாரம் கூட்டிய முப்படைகளின் தளபதிகளின் மாநாட்டில் பொலிஸ் மா அதிபர் ராஜகுரு கலந்து கொள்ளவில்லை அவருக்கு பதிலாக சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிலக்கிகொடித்துவக்கே பங்குபற்றினார்.

## கொடி ஏற்றல்

நாளை புதன்கிழமை நிகழும் இலங்கை சுதந்திர பொன்விழா நிகழ்வின் போது தீவகப் பாடசாலைகளில் காலை தேசியக் கொடி ஏற்றும் வைபவம் இடம்பெறும்.

## சேவைநலம் பாராட்டு

மானிப்பாய் இந்துக் கல்லூரி அதிபர் செ. கேசவராஜன் பணியை பாராட்டும் விழா எதிர்வரும் வெள்ளி பிற்பகல் கல்லூரி வாகீசர் மண்டபத்தில் நடைபெறும்.

# போக்குவரவுத் தண்டம் தொகை அதிகரிப்பு

கடந்த இரு மாதங்களில் கொழும்பு நகரில் பொலிஸார் பத்துலட்சம்ரூபாவை போக்குவரத்து விதிகளை மீறியமைக்கான குற்றப்பணமாக அறவிட்டுள்ளனர். போக்குவரத்து விதிகளை மீறும் சாரதிகள் மீது கடும் நடவடிக்கை எடுப்பதென பொலிஸார் தீர்மானித்துள்ளனர்.

இதனால் சகல சோதனைகளிலும் சித்தியடைந்த சாரதிகளுக்கே சாரதி அனுமதிப் பத்திரம் வழங்குமாறு சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகள் மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்திடம் தெரிவித்துள்ளனர். அத்துடன் பாடசாலை மாணவர்களுக்கு போக்குவரத்து விதிமுறைகள்பற்றி அறிவுறுத்தும் கருத்தரங்குகள் பாடசாலைகள் தோறும் நடாத்தப்பவுள்ளதாகவும் சிரேஷ்ட பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

## நியமனம்

ஏழாலை மேற்கினைப்பிறப்பிடமாகவும் யாழ் கச்சேரி நல்லூர் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட சட்டத்தரணி திரு. கந்தையா அரியநாயகம் மல்லாகம் மாவட்ட நீதிபதி திரு. மு. திருநாவுக்கரசு முன்னிலையில் சமாதான நீதவானாகவும் உத்தியோகப்பற்றற்ற நீதிபதியாகவும் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்.

# அடிலெய்ட் டெஸ்ட் டெய்லர் அபார ஆட்டம்

அடிலெய்டில் தென்னாபிரிக்க அணிக்கும் அவுஸ்திரேலிய அணிக்கும் இடையில் நடக்கும் மூன்றாவது டெஸ்ற்கிறிக்கட் போட்டியில் அவுஸ்ரேலியா அணித் தலைவர்முதல் இன்னிங்சின் இறுதிவரை ஆட்டம் இழக்காமல் 169 ஓட்டங்கள் எடுத்துள்ளார். அவுஸ்திரேலியா முதல் இன்னிங்சில் 350 ஓட்டங்கள் பெற்றுகொண்டது. தென்னாபிரிக்கா அணி வீரர் ஷாம் பொலக் 87 ஓட்டங்கள் கொடுத்து 7விக்கட்டுக்களைக் கைப்பற்றினார். தென்னாபிரிக்க அணி முதல் இன்னிங்சில் பெற்ற ஓட்டங்கள் 517 இரண்டாவதுடெஸ் போட்டி தொடர்ந்துநடைபெறுகிறது.

# சீருடை கொடுப்பனவை அதிகரிக்கக் கோரிக்கை

தாதிமார்களுக்கான சீருடைக் கொடுப்பனவை 7,500 ரூபாவாக அதிகரிக்கக் கோரிக்கை. தற்போது தாதிமாருக்கான சீருடைக் கொடுப்பனவாக 1.300 ரூபாவே வழங்கப்பட்டு வருகிறது.

ஆனால் தாதிமாருக்கான சீருடைச் செலவு 5,200 ரூபாவுக்கு மேல் செலவாவதாக இலங்கைத் தாதிமார் சங்கம் தெரிவித்துள்ளது. இதனால் தாதிமாருக்கான சீருடைக் கொடுப்பனவை 7,500 ரூபாவாக அதிகரிக்குமாறு தாம் கோரப்போவதாகவும் இது கிடைக்காதபட்சத்தில் தாம் சாதாரண உடையில் கடமைக்குச் சமூகமளிக்கப்போவதாகவும் இலங்கைத் தாதிமார் சங்கத் தலைவர் முருருத்தேதுவி ஆனந்ததேர தெரிவித்துள்ளார். இலங்கை முழுவதும் 13.850தாதிமார் பணிபுரிந்து வருகின்றனர்.

# மரக்கறி விதைகள் இலவச விநியோகம்

நெடுந்தீவு பகுதியில் வீட்டுத்தோட்டப்பயிர்செய்கையில் ஈடுபட்டவர்களுக்கு இலவசமாக மரக்கறி விதைகள் வழங்கப்பட்டன.

இங்குள்ள ஆறு கிராம சேவையாளர் பிரிவுகளில் உள்ளவர்களுக்கு இவை பகிர்ந்து அளிக்கப்மட்டது'

வேலணை உதவி அரசாங்க அதிபர் ஊடாக இவை வழங்கப்பட்டன.

## சடலங்களை...

ய்தி வெளியிட்டுள்ளது,

இதேசமயம் விடுதலைப்புலிகள் இத்தாக்குதலில் தாம் கைப்பற்றிய படையினரின் 50 சடலங்களை செஞ்சிலுவை சங்கம் ஊடாக இராணுவத்திடம் ஒப்படைக்கவுள்ளதாக புலிகளின் குரல் வானொலி தெரிவித்தது. படையினரின் சடலங்கள் தொடர்ந்து மீட்கப்பட்டுவருவதாகவும் அவ்வானொலி மேலும் தெரிவித்தது.

## வீதித்...

களாகப் பிரகடனப்படுத்தப்பட்டதுடன் போக்குவரத்து என்பன மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

கொழும்பு நகரில் பாதுகாப்புக்கு ஈடுபடுத்தப்பட்டுள்ள படையினருக்கு மேலதிகமாக சுமார் ஐயாயிரத்திற்கு மேற்பட்ட பொலிஸார் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகவும், கண்டி நகருக்கும் இவ்வாறு ஐந்தாயிரம் பொலிஸார் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேசமயம் கொழும்புக் கோட்டையினுள் லொறி போன்ற கனரக வாகனங்கள் நுழைவது இன்று முதல் தடை செய்யப்பட்டுள்ளது. எதிர்வரும் வெள்ளி முதல் இந்தத் தடை அமுலில் இருக்கும்.

## தமிழர்...

''இலங்கை தமிழ் மக்களின் தமிழ் ஈழ உரிமை உலக அங்கீகாரம் பெறவேண்டுமேயன்றி, அவ்வுரிமையினை அவர்கள் யாரிடமும் கேட்டுப் பெற்றுக் கொள்ளத் தேவை இல்லை' எனக்குறிப்பிட்டார். மேலும் அங்கு உரையாற்றிய பேராசிரியர் வில்சன் ''தமிழர்களின் உரிமையினை வழங்காத சந்திரிக்கா அரசின் தீர்வுத்திட்டம் தோற்றுப்போகுமே அன்றித்தமிழர் பிரச்சினைக்கு தீர்வாக அமையாது'' என குறிப்பிட்டுள்ளார். பிறிட்டிஸ் பாராளுமன்ற உறுப்பினர் உட்பட பலர் இம்மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றினர்.

# தமிழரை சிறுமைப்படுத்தும் ஜெயின் கமிஷன் அறிக்கை

## பி. ஜே. பி. தலைவர் வாஜ்பாய் குற்றச்சாட்டு

ராஜீவ் காந்தி கொலை தொடர்பாக ஜெயின்கமிஷனின் அறிக்கை தமிழ்மக்களை சிறுமைப்படுத்தும் வகையில் அமைந்துள்ளது என பாரதீய ஜனதாகட்சி தலைவர் அட்டல் பிஹாரி வாஜ்பாய் சென்னையில் நடந்த கூட்டம் ஒன்றில் தெரிவித்தார்.

ஜெயின் கமிஷன் இடைக்கால அறிக்கையின் அடிப்படையில்இந்தியாவில் ஐக்கிய முன்னணி அரசை பதவியில் இருந்து கவிழ்த்து விட்ட பின்னர் அந்த சமிஷனின் இடைக்கால அறிக்கையை ஒரு தேர்தல் பிரச்சனையாக ஆக்கி விடாமல் இருந்துவரும் காங்கிரஸ் கட்சி இது குறித்து மன்னிப்புகேட்கவேண்டுமெனவும் அவர் கோரினார்.

## பனைவிதைகள் நாட்டல்

பனை அபிவிருத்திச் சபையினால் முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், புத்தளம், சிலாபம் ஆகிய பிரதேசங்களில் 10 லட்சம் பனைவிதைகள் அண்மையில் நாட்டப்பட்டது.

கடந்த கால யுத்தத்தினால் ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட பனைகள் அழிக்கப்பட்டதும் இங்கு குறிப்பிடத்தக்கது

## தைப்பூச திருவிழா

எதிர்வரும் தைப் பூசத் திருவிழாவை முன்னிட்டு விசேட பூசை வழிபாடுகள் நாயன் மார்கட்டு அரசடிப் பிள்ளையார் கோவிலில் நடைபெறவுள்ளது.

# ஈராக்கை தாக்குவதற்கு சவுதி தளம் தர மறுப்பு

ஈராக்கைத் தாக்கும் பொழுது அமெரிக்காவிற்குத் தனது பிரதேசத்தைப் பயன்படுத்துவதற்கு அனுமதியளிக்கப் போவதில்லை என சவூதி அரேபியா அறிவித்துள்ளது.

அமெரிக்க வெளியுறவு அமைச்சச் திருமதி மெடலின் அல்பிறைட் இன்று சவூதி அரேபியாவிற்குமேற்கொள்ள இருக்கும் பற்றுப் பயணத்திற்கு முன்னதாக மேற்கண்ட அறிவித்தலை சவூதி அரேபிய அதிகாரிகள் அறிவித்துள்ளனர். இது இவ்வாறிருக்க ஐ. நா. ஆயுத பரிசோதனை குறித்த பிரச்சனைகளைப் பேசித் தீர்த்துக் கொள்ளும் நோக்கத்துடன் பிரான்ஸ் இராஜதந்திரிகள் குழு ஒன்று நாளை பக்தாத் செல்லவுள்ளனர். இப்பிரச்சனைக்குபேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண்பதற்காக ரஷ்யத் தூதர் திரு. விக்ரர் ஜோசுவான் யுக் ஏற்கனவே பக்தாத் சென்றுள்ளார்.

## இந்தியா பயணம்

சுவாமி விவேகானந்தரின் தாய்நாடு திரும்பிய நூற்றாண்டு பூர்த்தி நிறைவு விழா வேலூர் மடம் சிறிராமகிருஷ்ணா மிஷனில் நடைபெறவுள்ளது. இதில் கலந்துகொள்வதற்காக இலங்கை ராமகிருஷ்ணா மிஷன் உபதலைவர் சுவபமி ஆத்மானந்தர் இந்தியா சென்றுள்ளார்.

ஆயிரம் ரூபாய்

பரிசுப் போட்டி

விபரங்கள்

விரைவில்

''சூரிய காந்தி'' நிறுவனத்துக்காக அவர்களது அச்சகத்தில் 1998ம் ஆண்டு பிப்ரவரி 3ம் தேதி 68, ராசாவின் தோட்டம் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. ஆசிரியர்: சு. குமாரசுவாமி.